# கலைஞரும் நானும் 46

**“கலைஞர் அரசியலில் மட்டுமல்ல, திரைத்துறையிலும் மாயஜாலம் நிகழ்த்திய வித்தகர். சினிமாவில் வந்து எழுத வேண்டும் என, எனக்கு உந்துதல் அளித்தது கலைஞர் அவர்களின் பேனாதான்” என கலைஞருடனான நினைவுகளைப் பகிர்கிறார், திரைப்பட இயக்குநர் கே.பாக்யராஜ்.**

## ■ கே.பாக்யராஜ், திரைப்பட இயக்குநர்



# “அவர் கற்றது கையளவு... அவர் கொள்ளளவு உலகளவு!”

“பூம்புகார் திரைப்படத்தின் தொடக்கத்தில், திரையில் தோன்றி சில நிமிடங்கள் பேசுவார் கலைஞர். அப்போதுதான் முதல்முறையாக கலைஞரைப் பார்த்தேன். எனது பாட்டியுடன் பதிமூன்று வயதில் அந்தத் திரைப்படத்துக்குச் சென்ற நான், அங்கு கலைஞரை அறிந்ததுடன், கதை வசனம் எழுதினால், கைத்தட்டல் வரும் என்பதையும் அறிந்துகொண்ட இடம் அதுதான். திரைப்படங்களில் கதாநாயகர்களுக்குத்தான் கைதட்டல் வரவேற்பு கிடைக்கும் என அறிந்திருக்கும் வயதில், கதை வசனம் எழுதுபவருக்கு கிடைத்த வரவேற்பினால், திரைக்கதை குறித்து அறிந்துகொள்ள மனசுக்குள் விதை விழுந்தது. அதன்பின்னர்தான் அவர் எழுத்தாளர் என்பதை அறிந்துகொண்டேன்.

என் ஆரம்ப காலங்கள் தி.மு.க. படிப்பகங்களில் தான் தொடங்கியது. கிராமங்களில் எல்லோரையும்போல அங்குதான் பொழுது விடியும். எம்.ஜி.ஆரின் நடிப்பு, கலைஞரின் கதை வசனங்கள் ஆகியவற்றை புகழ்ந்து பாராட்டிக் கொண்டிருப்பார்கள். அவர்கள் இருவரின் பிரிவின்போது, எனக்கு மிகப்பெரிய தடுமாற்றமாக இருந்தது. எம்.ஜி.ஆர் ரசிகனாக, கலைஞரின் எழுத்தை விரும்புபவனாக அந்தக் குழப்பம் நீடித்தது.

### எம்.ஜி.ஆர் ரசிகர்

அதன் பின்னர், நான் திரைத்துறைக்கு வந்து அடையாளம் தெரிய தொடங்கியபோது, எம்.ஜி.ஆர் அவர்களுடன் நெருக்கம் காட்டினாலும், கலைஞருடனும் தொடர்பில் இருந்தேன். எனது படங்களில் தொடர்ச்சியாக, எம்.ஜி.ஆர் பாட்டு அல்லது ஏதாவது ஒரு சீன் வைத்து விடுவேன். இப்படி எம்.ஜி.ஆர் ரசிகராகக் காட்டிக் கொண்டிருந்த நாட்களில், ‘குங்குமம்’ இதழில் எம்.ஜி.ஆர் அவர்களின் சினிமா வாழ்க்கை குறித்து தொடர் எழுதும்படி அழைப்பு வந்தது.

எனது எழுத்துகளைத் தொடர்ச்சியாக வாசித்து வந்ததுடன், எழுத்தாளனாக என்னை ரசித்து, எழுத அழைத்தது எனக்குப் பெருமையாக இருந்தது. அந்தத் தொடர் குறித்து கலைஞர் அவர்களிடம் பேசுகையில், ‘எம்.ஜி.ஆரின் அரசியல் வாழ்க்கையை எழுதப்போவதில்லை, அவரது ரசிகனாக அவரது சினிமா வாழ்க்கையை மட்டுமே எழுதப்போகிறேன்’ என்றேன். அதற்கு அவர், ‘எம்.ஜி.ஆருக்கு நானும் ரசிகன்தான்’ என்றதுடன், எழுதும்படி உற்சாகமூட்டினார். அதை எழுதுவதற்கு எந்தக் கட்டுப்பாடுகளும் சொல்லவில்லை. எம்.ஜி.ஆரும் அந்தத் தொடரைத் தொடர்ந்து படித்து உற்சாகம் கொடுத்தார். நானும் அந்தத் தொடரில் சொல்ல நினைத்ததையெல்லாம் தெரிவித்தேன். எழுத்துக்கும், எழுத்தாளர்களுக்கும் அப்படியான சுதந்திரம் அளித்த பத்திரிகையாளராக கலைஞர் இருந்தார்.

எம்.ஜி.ஆர் உடல்நலம் இல்லாமல் இருந்தபோது, நான் அவர் மீது கொண்டிருந்த பற்று காரணமாக நேரடி அரசியலில் ஈடுபடத் தொடங்கினேன். அ.தி.மு.க பிரச்சார மேடைகளில் பேசுகையில், கலைஞரை விமர்சிக்க வேண்டிய நிலை இருந்தது. அப்படியான கூட்டங்களில் கலைஞர் பெயரைச் சொல்ல வேண்டும், கலைஞர் என சொல்லக்கூடாது என தொண்டர்கள் கூச்சலிடுவார்கள். ஆனால், நான் அதைச் செய்யவில்லை.



என் வயதுக்கும் அறிவுக்கும் அனுபவத்துக்கும் அவரை பெயர் சொல்லி அழைக்க முடியாது, எனக்கு அதில் உடன்பாடு இல்லை என மறுத்துவிடுவேன். இந்த நிகழ்வுகளைப் பின்னர் அறிந்துகொண்டு எம்.ஜி.ஆர் அவர்கள் என்னைப் பாராட்டினார். ‘எனக்கும் அவருக்கும் அரசியல் முரண்பாடுகள் இருக்கும். ஆனால், மரியாதையுடன் நடந்து கொண்டதுதான் சரி’, எனப் பாராட்டினார். ‘அதுதான் நம் பண்பாடு’ என விளக்கினார்.

**கலைஞரின் வசனங்களைப் பேசும் வில்லன்களும் கைதட்டல் வாங்குவார்கள் என்பதுதான், அவர் வசனங்களின் சிறப்பு.**

### நாடக வாழ்த்து

கலைஞருக்கு என்னிடம் பிடித்த விஷயம் என்றால், எனது எழுத்துதான். நடிகர், இயக்குநர் பாக்கியராஜ் என்பதைவிட, பேனா பிடித்து எழுதும் பத்திரிகையாளர் பாக்யராஜ்தான் ரொம்பப் பிடிக்கும். அதேபோல, எனது உறவினர்கள், ஊர்க்காரர்கள் எப்படி எனது பெயரைச் சுருக்கி அழைப்பார்களோ, அதுபோல கலைஞரும் எனது பெயரைச் சுருக்கமாக ’பாக்கி’ என அழைப்பார். அது என்னை நெகிழ வைக்கும். என்னைப் பற்றி ஒரு வாரப்பத்திரிகையில், நடிகர் விவேக் கட்டுரை எழுதி இருந்தார். அதைப் படித்துவிட்டு, அதிகாலை 5 மணிக்கு போன் செய்து, முதலில் எனக்குக் கூறியவர் கலைஞர்தான். அவர் கூறிய பின்னரே அந்தக் கட்டுரையை நான் வாசித்தேன். அவரது பிறந்த நாள் ஒன்றின் போது, எனது வாழ்த்தினை ஒரு நாடகமாக எழுதி மேடை ஏற்றினேன். கலைஞர் அதை வெகுவாக ரசித்தார்.

எனது படங்கள் வெளியான போதெல்லாம், படத்தைப் பார்த்துவிட்டுப் பேசுவார். சிறப்புக் காட்சிகளுக்கு அழைக்கும்போது நேரம் இருந்தால் வந்து பார்த்து கருத்து சொல்வார். குறிப்பாக, எனது ‘இது நம்ம ஆளு’ படம் வெளிவந்தபோது வெகுவாக ரசித்தவர், சிறப்புப் பரிசு வழங்கி பெருமை செய்தார்.

### கொள்ளளவு உலகளவு

கலைஞர் குறித்து நான் எழுதுகையில், ‘நீ கற்றது கையளவு, உன் கொள்ளளவு உலக அளவு’ என எழுதினேன். அவ்வளவு உலக ஞானத்தைக் கொண்டவர் அவர். கல்லாதது என அவரை நோக்கிச் சொல்ல முடியாது. பேச்சாளர், இலக்கியவாதி, அரசியல்வாதி, ஆட்சியாளர் என அத்தனை திறமைக்கும் அவர் தகுதி கொண்டவராக இருந்தவர். எழுதுவது எப்படி என்பதை அவரைப் பார்த்துத்தான் கற்றுக் கொண்டோம் என்பதால், திரைப்பட எழுத்தாளர்கள் சார்பில், அவருக்கு மரியாதை செய்தோம்.

திரையில் பின்னணியில் இருந்த வசனம், திரைக்கதை என்கிற துறையில் இயங்கி, முன்னணி நடிகர்களுக்கு இணையாகப் புகழும் செல்வாக்கும் கொண்டவர் கலைஞர். கலைஞரின் வசனங்களைப் பேசும் வில்லன்களும் கைதட்டல் வாங்குவார்கள் என்பதுதான், அவர் வசனங்களின் சிறப்பு.

நான் எம்.ஜி.ஆர் ரசிகனாக இருந்தாலும், கலைஞரின் குட்புக்கில் இடம்பிடித்ததற்கு காரணம் எழுத்து. கலைஞர் அந்த அடையாளத்துடன் என்னைப் பார்த்தது எனக்கு கிடைத்த பேறு. மறைவுக்குப் பின்னாலும் மனதில் இடம்பிடித்து வாழ்கிறார் எழுத்தாளர் கலைஞர்.

...பகிர்வார்கள்

---

## வழிகாட்டும் வ.களத்தூர் ஊராட்சி!

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டையை அடுத்துள்ள கிராமம் வ.களத்தூர். சமுதாய நல்லிணக்கம், சமத்துவச் செயல்களை முன்னெடுப்பதில் மாதிரி கிராமமாக உருவாகி வருகிறது. அந்த கிராமத்தில் செயல்பட்டு வரும் திராவிடச் சிந்தனை கொண்ட இளைஞர்கள் குழுவாக இணைந்து, சமூக நல்லிணக்கப் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கோயில் திருவிழா, பள்ளிவாசல் திருவிழாக்களில் ஏற்கெனவே உருவாகி வந்த பதட்டத்தைத் தணித்து, கோயில் திருவிழாக்களில் ஜமாத் நிர்வாகிகளும், பள்ளிவாசல் நிகழ்வுகளில் கோயில் நிர்வாகிகளும் கலந்து கொள்ளும் வகையில் சுமுக நிலையை எட்டியுள்ளனர். இதற்கு முன்பு, ஊராட்சி மன்றத் தலைவருக்கே பாதுகாப்பு இல்லாத கிராமமாக இருந்ததை, பத்திரிகை செய்திகள் சொல்கின்றன. ஆட்சிமாற்றத்துக்குப் பின்னர் அரசின் நோக்கங்களுக்கு ஏற்ப, ஊராட்சி மன்றமும் சமத்துவப் பாதைக்குத் திரும்பிவிட்டது.

இந்த நிலையில், அந்த கிராமத்தில் பல ஏக்கர் ஆக்கிரமிப்பு நிலங்கள் அரசு உதவியுடன் மீட்கப்பட்டுள்ளன. தவிர, வசிக்க வீடற்ற மற்றும் நிலமற்ற கூலித் தொழிலாளர்கள் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு வீட்டுமனை நிலம் வழங்க ஊராட்சியில் தீர்மானம் இயற்றப்பட்டு, வருவாய்த் துறை மூலம் பட்டா வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சமூக நீதியின் பால் பற்றுக்கொண்டவர்கள் மாற்றங்களை நிகழ்த்திக் காட்டுவர். அதற்கு வ.களத்தூரும் சாட்சி!

## :ப்ளாஷ்பேக்



1986-ஆம் ஆண்டு மே 1 அன்று முஸ்லிம் வாலிபர் முன்னேற்றக் கழகத்தின் 50-வது ஆண்டு விழாவையொட்டி தலைவர் கலைஞர் கோவை மாநகருக்கு வருகை தந்தார். சிறுபான்மையினருக்கு ஆதரவாக, அவரது உரை அமைந்ததாகவும், அந்த மேடையில் என் தந்தை தலைவர் கலைஞருக்கு சால்வை அணிவித்ததையும் அடிக்கடி குறிப்பிட்டுள்ளார். இன்றளவும் எங்கள் இல்லத்தை அலங்கரிக்கும் புகைப்படங்களுள் இந்தப் படம் முக்கியமானது.

**-சாதிக்நூர், கோவை மாநகர் மாவட்டம்**

### மு.வா. விழாவில் மு.க.!



சாதிக்நூர்

‘இசை முரசு’ நாகூர் ஹனீபா அவர்கள் என் தந்தைக்கு நெருங்கிய உறவுக்காரர் ஆவார். என் தந்தை மாணவர் பருவம் தொட்டே கழகத்தில் இணைந்து தீவிரமாகச் செயலாற்றி வந்தவர். கோவை மாநகர் மாவட்டப் பிரதிநிதியாக என் தந்தை நூர் முகம்மது பொறுப்பு வகித்தபோது,

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in


## கருவூலம்

### ஆறுதல் சொன்ன பேரறிஞர் அண்ணா!

**1962-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் காஞ்சிபுரம் தொகுதியில் போட்டியிட்ட பேரறிஞர் அண்ணா தோல்வியுற்றார். அண்ணாவின் தோல்வி செய்தியைக் கேட்ட பிறகு மற்ற தொகுதிகளின் முடிவை அறிய யாரும் ஆர்வம் காட்டவில்லை. அந்த நேரத்தில் அறிஞர் அண்ணா கழகத்தினருக்கு உருக்கமான வேண்டுகோள் விடுத்தார். “உள்ளம் உடையக் கூடாது, கண்ணீரைத் துடைத்துக் கொண்டு கழகக் காரியமாற்றப் புறப்படுங்கள். முன்னிலும் அதிக ஆர்வம் காட்டி பணிபுரியுங்கள். நான் சட்டசபையிலிருந்து கொண்டு பணியாற்றுவதைத் தடுக்க மட்டுமே, இந்தத் தோல்வி பயன்படும்” என கலங்கி நின்ற கழகத்தினருக்கு ஆறுதல் அளித்தார் அண்ணா.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 311




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131